பல வருஷங்கள் ஆசிரியர்களாகவே பணியாற்றியிருப்பதால் இவர்களுக்குக் குறைந்த கால பயிற்சி கொடுத்தால் போதும் என்பதாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன். இதனுல் அவர்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்கள் இல்லாமல் இருக்கும் என்பதையும் கவனிக்கவேண்டும்.

ஆசிரியர்களுக்கு ஜில்லா போர்டுகளில் மாதாமாதம் சம்பளம் கொடுப்பது இல்லே. பல மாதங்கள் சம்பளம் கொடுக்காமலேயே தாமதம் செய்து விடுகிருர்கள். உடனடியாக மாதாமாதம் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக நான் குறிப்பிட்டுள்ளவற்றில் மிகவும் முக்கியமாக வற்புறுத்துவது கணவன் மனேவி விஷயம்தான். நாம் எத்தனேயோ சினிமாக்கள் பார்க்கிருேம். நாடகங்கள் பார்க்கிருேம். குழந்தையை பிரிந்த தாய் நிலேயைபோல் கணவனும், மனேவியும் பிரிக்கப்படுவதாலுல் அவர்களுக்கு உண்டாகிற துன்பங்கள் எத்தனே என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. ஆகவே அவர்களேப் பிரித்து வெவ்வேறு பள்ளிகளில் வெவ்வேறு ஊர்களில் போடாமல் ஒரே ஊரில் அவர்கள் சேர்ந்து இருந்து பணியாற்றும் படி உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

Sri S. SADASIVAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நமது கல்வி அமைச்சர் கோரியிருக்கும் மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தாழ்ந்த நிலேமையில் உள்ள மக்கள் நல்ல முறையில் பல தொழில்களேப் புரிந்து பொருளாதார வளமும், வாழ்க்கை வளமும் பெற்று வாழவேண்டுமென்ருல் கல்வி அவசியம். தொழில் கல்வி மிகுதியாகப் பரப்பப்பட வேண்டியதும் அவசியம். நமது மக்களின் கல்வித் தரம் உயர உயரத்தான் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். இதற்கு வேண்டிய நல்ல பணியை நமது அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. அதை நமது கல்வி அமைச்சர் அவர்களே தன்னுடைய முன்உரையில் குறிப்பிட்டார்கள். 1-55 p.m.

முதல் ஐந்தாண்டு காலத்திலே அதற்குப் பெரும் தொகையை ஒதுக்கி, மத்திய அரசாங்கத்தின் உதவி மூலமாகவும் ஓராசிரியர் பள்ளிக் கூடங்களே நிறையத் திறந்தோம். அந்தப் பள்ளிக்கூடங்கள் சில நல்ல முறையில் நடைபெறவில்லே என்பதாக நான் ஒருபக்கத்தில் குற்றம் சாட்டினுலும் பல பள்ளிக்கூடங்கள் நல்லமுறையில் பணியாற்றி வருகின்றன. குறிப்பாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் படிக்காதவர்கள் இன்றைக்கு அங்கே திண்டாடிக்கொண்டிக்கிருர்கள். குறிப்பாக எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களிடையே உள்ள வேலே இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கவே ஓராசிரியர் பள்ளிகளில் தேர்ச்சி பெருதவர்களே நியமிக்கலாம் என்பதாக சர்க்கார் செய்தது எனச் சொல்லலாம். அவர்கள் இப்போது பயிற்சிக்குச் செல்லவேண்டுமென்ற முறையை வைத்திருக்கிருர்கள். ஒரு சில பள்ளிகளில் சில குறைபாடுகள் நிலவி வருகின்றன. சராசரி 500 ஜனத்தொகை உள்ள கிராமங்களில் இந்தப் பள்ளிகள் அமைக்கப்படுகிறது. அங்கெல்லாம் மிக ஏழை எளிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். அவர்களாகவே பள்ளிக்கட்டிடச் செலவை ஒத்துக்கொள்ள முடியாத நிலேமையில் இருக்கிருர்கள். அந்த மக்களுக்கு உதவி செய்வதற்காக சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் உள்ள இடங்களில் பாதித்தொகை கொடுத்து வருகிருர்கள். மேலும் ஜனத்தொகை அதிகம் இல்லாத காரணத்தால் தங்கள் உழைப்பைப் பெரிதும் உபயோகப்படுத்தி கட்டிடத்தைக் கட்டுவதாலுலும் முடியாமல் இருக்கிறது. ஆனுல் ஜில்லா போர்டுகள் கொடுத்துவந்த கால்பங்கு மான்யத் தொகையைக் கொடுக்கச் சொன்னுல் அவர்களுக்கே போதுமான நிதி இல்லே. அதனுல் இது போன்ற மான்யத் தொகைகளே இனிமேல் கொடுக்கக்கூடாது என்று அரசாங்கத்தாரால் சொல்லப்படுகிறது. இதனுல் பல பள்ளிக்கூடங்கள் கட்ட முடியாத நிலேமையில் இருக்கின்றன. அரசாங்கம் இதைக் கவனித்து பள்ளிக்கூடக் கட்டிடங்கள் தேவைப்படுகிற இடங்களில் உடனடியாகக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.